“சிறப்பான கல்வி வேலைவாய்ப்பு திட்டங்களைச் செயல்படுத்தும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலினைப் பெற்றுள்ளதற்காக தமிழ் மக்கள் பெருமைப்பட வேண்டும்!” தெலுங்கானா முதலமைச்சர் மாபெரும் பாராட்டு !

# முதலமைச்சருக்கு - வெற்றி பெற்ற மாணவ - மாணவியர் உணர்ச்சி பூர்வ நன்றி!

## சென்னை – நேரு உள்விளையாட்டு அரங்கில் – ‘கல்வியில் சிறந்த தமிழ்நாடு’– மாபெரும் கல்வி எழுச்சித் திருவிழா!

**சென்னை, செப். 28 -**

**தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் ஆட்சியின் வெற்றித் திட்டங்கள் இந்தியா முழுவதிலும் கவனத்தை ஈர்த்துள்ளது.**

**தமிழ்நாடு என்பது வெறும் நிலப்பரப்பல்ல. அது அறிவுக் கருவறையில் பிறப்பெடுத்த அற்புதக் களஞ்சியம். இங்கு கல்வி என்பது ஒளி பாய்ச்சும் ஒரு மின்விளக்கல்ல. அது சமூகத்தின் இருளைக் கிழிக்கும் தீப்பந்தம்! பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே, அறம், பொருள், இன்பம், வீடு என வாழ்வின் சகல பரிமாணங்களையும் கற்றுத் தெளிந்த திறன்மிகு தலைமுறையை உருவாக்கிய மண் இது.**

“கற்றாரை நாடே நாடும்” என்ற சங்க இலக்கியக் குரல், வெறும் பழமொழியாக அல்லாமல், இன்றும் தமிழகத்தின் இரத்த நாளங்களில் ஓடும் அறிவுத் தாகமாக, புரட்சிக் கனலாகத் திகழ்கிறது. மொழி, இனம், வறுமை என்ற எந்தத் தடையுமின்றி, ஒவ்வொரு குழந்தையும் தன் மூளையின் முழுத் திறனையும் பயன்படுத்தும் வல்லமை பெற வேண்டும் என்பதில் தமிழ்நாடு உறுதியாய் நிற்கிறது! திராவிட இயக்கங்களின் தொடர்ச்சியான சமூகநீதிக் கொள்கைகள் மற்றும் தொலைநோக்குப் பார்வையுடன் கூடிய திட்டங்களால், தமிழ்நாடு இன்று இந்தியாவின் கல்விப் பரவலில் ஒரு முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது.

‘கல்வியில் சிறந்த தமிழ்நாடு’ என்ற தலைப்பில் தமிழ்நாடு அரசு சென்னை ஜவஹர்லால் நேரு உள் விளையாட்டு அரங்கில் 25.9.2025 அன்று மாலையில் நடத்திய மாபெரும் நிகழ்ச்சி அரசின் சாதனையை மட்டும் கூறாமல் மாநிலத்தின் கல்வித் துறையில் ஏற்பட்டுள்ள மாபெரும் முன்னேற்றங்கள் மற்றும் செயல்படுத்தப்படும் முன்னோடித் திட்டங்களையும் பொதுவெளிக்குக் கொண்டுவரும் ஒரு தளமாகவும் அமைந்தது.

தமிழ்நாட்டின் கல்விப் புரட்சி என்பது ஒரு நாள் இரவில் நிகழ்ந்ததல்ல. இது, திராவிட இயக்கங்களின் நூற்றாண்டு காலச் சமூக நீதிச் சிந்தனையின் தொடர்ச்சி. 1920-களில் நீதிக்கட்சி ஆட்சியில் சென்னை மாநகராட்சிப் பள்ளியில் தொடங்கப்பட்ட மதிய உணவுத் திட்டம், பிற்காலத்தில் ஒட்டுமொத்த இந்தியாவிற்கும் முன்மாதிரியாக மாறியது. மேலும், இலவசக் கல்வி, சீருடை, புத்தகங்கள், மிதிவண்டிகள் போன்ற திட்டங்கள், கல்வி கற்பதற்கு இருந்த பொருளாதாரத் தடைகளை நீக்கி, அடித்தட்டு மக்களையும் கல்விக்கூடங்களுக்குள் ஈர்த்தன. இதன் அடுத்த கட்ட பரிமாணமாக முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் செயல்படுகிறது.

கல்வியில் சிறந்த தமிழ்நாடு நிகழ்ச்சி சென்னை நேரு உள்விளையாட்டு அரங்கில் மிகப் பிரமாண்டமாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. 4 மணிக்கு நிகழ்ச்சி தொடங்கியது. நிகழ்ச்சியில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களும், சிறப்பு விருந்தினராக தெலங்கானா முதலமைச்சர் அ.ரேவந்த் ரெட்டி அவர்களும் கலந்து கொண்டனர்.

மேலும், திரைத்துறை பெருமக்கள், கல்வியாளர்கள், பத்திரிகையாளர்கள், அரசியல் கட்சித் தலைவர்கள், பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவிகள் எனப் பல்வேறு பிரிவினரும் கலந்து கொண்டனர்.

### முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் நிகழ்த்திய மாபெரும் புரட்சி பள்ளிக் குழந்தைகள்– பெற்றோர் – திரைப் பிரபலங்கள் உணர்ச்சி பொங்க மேடையிலே பேச்சு – அதிர்ந்த அரங்கம் –

நிகழ்ச்சிகளின் முதல் நிகழ்வே முதலமைச்சரின் காலை உணவுத்திட்டம் நிகழ்த்திய மாபெரும் புரட்சியைப் பற்றியதாக அமைந்திருந்தது.

அதுகுறித்த காணொலிகள் ஒளிபரப்பப்பட்டன.

அரசுப் பள்ளி மாணவர்களும் அவர்களின் தாய்மார்களும் மேடையை அலங்கரித்து நின்றனர்.

ஒவ்வொரு மாணவரும் தங்கள் அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர். இந்தக் காலை உணவுத் திட்டத்தினால் அவர்கள் எந்தளவுக்குப் பயன் பெற்றனர் என்று அவர்களுக்கே உரிய பிஞ்சு மொழியில் கூறினார்கள். மாணவர்களின் தாய்மார்களும் காலை உணவுத் திட்டம் மூலம் அவர்களுக்குப் பணிச்சுமை எந்தளவுக்குக் குறைந்திருக்கிறது என்பதை விளக்கினார்கள். அவர்களில் சிலர் காலை உணவுத் திட்டத்தில் சமைக்கும் பணியில் இருப்பவர்களும் இருந்தனர். அவர்கள் மற்ற குழந்தைகளையும் தன் குழந்தைகளைப் போல் எண்ணுவதால் ஆரோக்கியத்துடனும், அக்கறையுடனும் சமையல் செய்கிறோம் எனக் கூறியது பார்வையாளர்களைப் பெரிதும் கவர்ந்தது.

அதுமட்டுமின்றி மேடையிலேயே காலை உணவுத் திட்டத்தில் சமைத்து மாணவர்களுக்கு வழங்கப்படும் சாம்பாரின் சுவையைத் தொகுப்பாளர் திவ்யதர்சினியும், அமைச்சர் மதிவேந்தன் அவர்களும் மேடையிலேயே ருசித்துப் பார்த்த நிகழ்வுகள் அற்புதமாக இருந்தன.

### இறுதியாக இயக்குநர் பிரேம் இதுகுறித்துப் பேசும் போது,

படிங்க.. படிங்க என்று யார் சொன்னாலும் நமக்கு உற்சாகமாக இருக்கும். ஆனால் ஒரு மாநிலத்தின் முதலமைச்சரே படிங்க என்று சொல்வது இன்னும் நமக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது. தமிழ்நாடு பகுத்தறிவுக்கு மட்டும் அல்ல, கல்வி அறிவுக்கும் பெயர் பெற்ற மாநிலம். ”அரசுப் பள்ளியில் கொடுக்கும் சத்துணவை நானும் உண்டிருக்கிறேன்.. அந்த அனுபவம் எனக்கும் உண்டு. இன்று அரசுப் பள்ளிகளில், மாணவர்களுக்குக் கிடைக்கும் சலுகைகளைப் பார்த்து அரசுக்கு நன்றி சொல்லத் தோன்றுகிறது” என்று தெரிவித்தார்.

இந்தக் காலை உணவுத்திட்டத்தின் மூலமாக அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் உள்ள பல்லாயிரக்கணக்கான மாணவ, மாணவிகள் பசியின்றிக் கல்வி கற்கின்றனர். காலை உணவுக்காகவும், முழு நாளும் உற்சாகமாக இருக்கவும் குழந்தைகள் தவறாமல் பள்ளிக்கு வருகின்றனர். இதனால் வருகைப்பதிவு விகிதம் அதிகரிக்கிறது. ஆரம்பப் பள்ளியில் இருந்தே குழந்தைகள் தொடர்ந்து கல்வி கற்க ஊக்குவிக்கப்படுவதால், இடைநிற்றல் பெருமளவு குறைகிறது. பொருளாதாரத்தில் பின்தங்கிய குடும்பங்கள் தங்கள் குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்ப இது ஒரு பெரிய உந்துதலாகவும் செயல்படுகிறது. பொருளாதார ஏற்றத்தாழ்வுகளைக் கடந்து, அனைத்துக் குழந்தைகளுக்கும் சமமான கல்வி வாய்ப்பை உறுதி செய்கிறது. காலையில் சமைக்கும் சுமை பெற்றோர்களுக்குக் (குறிப்பாகத் தாய்மார்களுக்கு)க் குறைவதால், அவர்கள் பிற வேலைகளிலும், சுய வேலைவாய்ப்பிலும் கவனம் செலுத்த வாய்ப்பு கிடைக்கிறது.

அடுத்ததாக நான் முதல்வன் திட்டம் மூலமாகப் பயன் பெறும் மாணாக்கர்கள் வரவழைக்கப் பட்டனர்.

மேடையில் பேசிய ஒவ்வொரு மாணவ, மாணவிக்கும் நான் முதல்வன் திட்டம் கொடுத்த வாய்ப்பும் ஊக்கமும் உண்மையிலேயே அனைவரையும் ஆச்சர்யத்தில் ஆழ்த்தியது.

ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பது போல அங்கு நின்ற அத்தனை மாணவ, மாணவிகளின் பேச்சுக்கும் மணி மகுடம் வைத்தது போல, நான் முதல்வன் திட்டத்தின் மூலமாகப் பயனடைந்த மாணவி பிரேமாவின் பேச்சு அமைந்திருந்தது.

அவருடைய பேச்சைக் கேட்டு ஒட்டு மொத்த பார்வையாளர்கள் மட்டுமின்றி, முன் வரிசையில் அமர்ந்திருந்த முக்கிய விருந்தினர்களும் கண்கலங்கினர்.

அதிலும் முத்தாய்ப்பாக நான் முதல்வன் திட்டம் மூலமாகத் தனக்குக் கிடைத்த பணி வாய்ப்பின் மூலம் தான் பெற்ற முதல் ஊதியத்தைத் தன்னுடைய தந்தையை மேடையில் ஏற்றி அவரிடம் கொடுத்த நிகழ்வுதான் நான் முதல்வன் திட்டத்திற்குக் கிடைத்த உண்மையான வெற்றி.

கிராமப் பின்புலத்திலிருந்து வந்த மாணவர்களை இன்று உலக அளவில் கொண்டு சேர்த்து அவர்களின் எதிர்காலத்திற்கு வலு சேர்க்கும் மாபெரும் நம்பிக்கை நட்சத்திரமாக நான் முதல்வன் திட்டம் விளங்குகிறது என்றால் அது மிகையில்லை.

இந்தத் திட்டங்களைப் பற்றி நீதியரசர் சந்துரு, பட்டிமன்றப் பேச்சாளர் பாரதி பாஸ்கர், இயக்குநர் தமிழரசன் பச்சைமுத்து, அசோக் லேலண்ட் பாலா ஆகியோர் மனதாரப் புகழ்ந்து பேசினார்கள்.

### திரைப்பட இயக்குநர்களின் பாராட்டு

இயக்குநர்கள் மிஷ்கினும், தியாகராஜா குமாரராஜா அவர்களும் பேசியவை அனைவருடைய கவனத்தையும் ஈர்த்தன.

அதில், குறிப்பாக தியாகராஜா குமாரராஜா பேசிய, கை , கால்களைக் கட்டிக் கடலில் தூக்கி எறிந்து ஒன்றிய அரசு வஞ்சித்தாலும் தானும் நீந்தி தன் மக்களைக் காப்பாற்றி வரும் தமிழ்நாட்டின் முதல்வர்க்கு நன்றி எனக் குறிப்பிட்டது கைதட்டல்களால் அரங்கத்தையே அதிரச் செய்தது என்றுதான் கூற வேண்டும்.

### விளையாட்டுத் துறையில் சாதிக்கும் மாணவர்கள்

அடுத்ததாக விளையாட்டுத்துறையில் சாதித்த, சாதித்துக் கொண்டிருக்கிற மாணவர்கள் மேடையேறினார்கள்.

நம் தமிழ்நாடு கல்வியில் மட்டுமல்லாமல் விளையாட்டுத்துறையிலும் முதலிடத்தில் தான் இருக்கிறது என்பதற்குச் சாட்சிகளாக நின்றனர்.

பாராலிம்பிக்கில் சாதித்த மனோஜ் சிங்கராஜா பேசும்போது, ”தனக்கு விளையாட்டுத்துறையில் வாய்ப்பு மறுக்கப்பட்டதையும், விளையாட்டுத் துறையில் தன்னை தமிழ்நாடு அரசு சாதிக்க வைத்த அனுபவத்தையும் வெளிப்படுத்தினார். ஒன்றிய அரசால் மறுக்கப்பட்ட பணி வாய்ப்பு அன்று தமிழக அரசால் நிறைவேற்றத் தரப்பட்டுள்ளது. இதன் மூலமாக அவருக்குக் கிடைக்க வேண்டிய அனைத்தும் மிகச் சரியாகக் கிடைத்து வருகிறது..

### துணை முதலமைச்சர் அவர்களால் பெருமைபெறும் விளையாட்டுத்துறை

விளையாட்டுத்துறையின் காலத்தை இருவேறு காலங்களாகத் தான் நாம் கணக்கில் கொள்ள வேண்டும். அது துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வருகைக்கு முன், வருகைக்குப் பின் என்றுதான் கூற வேண்டும். விளையாட்டுத்துறையின் அமைச்சராக உதயநிதி அவர்கள் பதவியேற்ற பிறகுதான் விளையாட்டுத் துறையே புதிய பரிமாணத்தை அடைந்தது என்று கூறலாம்.

விளையாட வேண்டும் என்ற கனவை மட்டும் சுமந்திருந்த மாணவர்களுக்கு கை நிறைய ஊக்கத் தொகை வழங்கியதோடு மட்டுமல்லாமல் விளையாட்டில் சாதித்த மாணவர்களுக்கு 3 சதவீத இட ஒதுக்கீட்டின் கீழ் வேலை வாய்ப்பையும் அமைத்துக் கொடுத்திருக்கிறார்.

மாற்றுத்திறன் விளையாட்டு வீரர்களும் இன்று சாதனை படைத்திருப்பதற்குக் காரணம் துணை முதல்வர் உதயநிதி அவர்கள் மட்டும் தான் என்பதை மிகப் பெருமையாகவே கூறலாம்.

விளையாட்டு என்பது சாதாரண விஷயம் அன்று. அதில் சாதிப்பதென்பதும் பெரிய விஷயம். பணம் படைத்தவர்கள் மட்டும் தான் விளையாட்டில் சாதிக்க முடியும் என்ற நிலையை மாற்றி, சாதாரண குக்கிராமத்தில் பிறந்த எவரும் சாதிக்கலாம் என்ற நிலை இன்றைக்கு விளையாட்டுத்துறை மூலம் உருவாகியிருக்கிறது.

ஒலிப்பிக்கில் இந்தியாவைத் தேடிக் கொண்டிருந்த காலம் போய் இன்றைய தினம் தமிழ்நாட்டு இளைஞர்கள் சர்வதேச அளவில் தங்கள் வெற்றிக் கொடிகளை நாட்டி வருகின்றனர்.

### மாற்றுத்திறனாளி வீராங்கனை

ஒலிம்பிக்கில் உசேன் போல்டு பெற்ற 3 தங்கங்களை நம்முடைய தமிழ்நாட்டு விளையாட்டு வீராங்கனை ஜெர்லின் பெற்று விட்டார் என்பதும் அளவிட முடியாத மகிழ்ச்சியைக் கொடுக்கிறது. அந்த வீராங்கனையால் வாய் பேச காது கேட்க முடியாதவர் என்ற செய்தியை அவருடைய தந்தை மேடையில் பகிர்ந்தது அனைவரையும் ஆச்சர்யத்தில் ஆழ்த்தியது.

இதுகுறித்துப் பேச இயக்குநர் மாரி செல்வராஜும், இந்திய கிரிக்கெட் வீரர் நடராஜனும் மேடைக்கு அழைக்கப்பட்டனர்.

அப்போது பேசிய இயக்குநர் மாரி செல்வராஜ், ”நான் பள்ளியில் படிக்கும்போது சாதிய உளவியலால் அதிகம் கஷ்டப்பட்டேன். ஆனால், இன்று பள்ளிக்குள் சமூக நீதி, சமத்துவம் என்ற வார்த்தையை ஓங்கி ஒலிக்கவைக்கக் கூடிய நடவடிக்கையில் பள்ளிக்கல்வித்துறை ஈடுபட்டு வருகிறது. பள்ளிகளில் இருக்கும்




சாதியப் பெயர்கள் நீக்கப்பட்டதைப் பார்க்கும்போது மகிழ்ச்சியாக இருக்கிறது.என்று தன் கருத்தை வெளிப்படுத்தினார்.

நடராஜன் பேசும்போது, நானும் அரசுப் பள்ளியில் தான் படித்தேன். கல்வியில் மட்டுமல்லாமல், விளையாட்டுத்துறையிலும் நம் தமிழ்நாடு சிறந்து விளங்குகிறது. அரசு மாணவ, மாணவிகளுக்கு என்றும் பக்கபலமாக இருப்பது மிகவும் நம்பிக்கை அளிப்பதாகத் தெரிவித்தார்.

### புதுமைப்பெண் – தமிழ்ப் புதல்வன் திட்டங்களின் மகிமை

இதற்கு அடுத்ததாக, புதுமைப் பெண் மற்றும் தமிழ்ப் புதல்வன் திட்டங்கள் வாயிலாக மாதம் தோறும் 1000 ரூபாய் பெற்று வரும் மாணவ, மாணவிகள் மேடைக்கு வந்தனர்.

வெறும் ஆயிரம் ரூபாய் ஒரு மாணவியின் வாழ்க்கையில் என்ன மாற்றத்தை ஏற்படுத்தி விடப் போகிறது என்ற எக்காளப் பேச்சுக்குப் பதில் அளிக்கும் விதமாக தஞ்சையைச் சேர்ந்த மாணவி ரம்யாவின் பேச்சு அமைந்திருந்தது.

புதுமைப்பெண் திட்டத்தில் வரும் பணத்தைச் சேர்த்து வைத்து, என்னுடைய அம்மாவுக்குக் காது கேட்குற மெசின் வாங்கிக் கொடுத்தேன்’ என்று அவர் கூறிய அந்த தருணம் அனைவருமே கண்ணீர் சிந்தினர்.

பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் அவர்கள் அந்த மாணவியின் பேச்சைக் கேட்டு தன் கண்களின் கண்ணீரை கைகளால் துடைத்த அந்த நொடியே வரலாற்றுச் சிறப்பு மிக்க நெகிழ்ச்சியை ஏற்படுத்தியது.

மேடையில் தங்கள் அனுபவங்களைப் பகிர்ந்த மாணவர்கள் புதுமைப் பெண் திட்டமும் தமிழ்ப்புதல்வன் திட்டமும் சத்தமில்லாமல் பெரும் எழுச்சியை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றன என்பதற்குச் சாட்சிகளாக நின்றனர்.

அதே மேடையில், ஒரு தாயும், மகனும் ஒரே கல்லூரியில் படிப்பதற்குப் பொருளாதார ரீதியாக மகளிர் உரிமைத் தொகையும், புதுமைப்பெண் திட்டமும் எந்தளவுக்கு உதவியாக இருக்கின்றன என்பதை விளக்கியதையும் காண முடிந்தது.

அதற்கு அடுத்துப் பேசிய சுப்புலட்சுமியின் பேச்சைக் கேட்ட முதலமைச்சர் நேரடியாகத் தம்மிடம் அழைத்து அவருடைய சட்டைப் பையில் இருந்து ஒரு பேனாவை அந்த மாணவிக்குப் பரிசளித்தார்.

தெலுங்கானா முதலமைச்சர் அ.ரேவந்த் ரெட்டி அந்த மாணவியின் தலையை அன்பாக தடவிக்கொடுக்க, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஒரு தந்தையின் இடத்தில் இருந்து நான் இருக்கிறேன் எதற்கும் கலங்காதே நீ நன்றாகப் படி என்ற நோக்கி அந்த மாணவியை நெற்றியில் முத்தமிட்டு உச்சிமுகர்ந்தது நெகிழ்வான தருணமாக இருந்தது.

### நடிகர் சிவகார்த்திகேயனிடம் இருக்கும் தைரியம்

இந்தத் திட்டம் குறித்துப் பேசிய நடிகர் சிவகார்த்திகேயன் அவர்கள், “சினிமாத்துறை மிகவும் சவாலானது. இதில் சவால் வரும் போதெல்லாம் எனக்கு இருக்கும் ஒரே தைரியம் என் கிட்ட 2 டிகிரி இருக்கு. இங்க இருந்து அனுப்புனா கூட என்னால ஏதாவது வேலை செஞ்சி பொழச்சிக்க முடியும்ன்னு இருக்குறதுதான்.” என்று பேசியது அனைவராலும் ரசிக்கப்பட்டது.

### பள்ளிக் கல்வித்துறை அமைச்சரின் ஆனந்தக் கண்ணீர்

அதற்கு அடுத்ததாக பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் அவர்கள் மேடைக்கு வந்து, இங்கு வந்து பேசிய பயனாளிகளைப் பார்க்கும் போது, எங்க பிள்ளைங்க எல்லாம் இப்படி சாதிக்கிறாங்களே என் அவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கிறது. அது தான் ஆனந்த கண்ணீராகவும் வெளிப்படுகிறது என்று கூறி அசத்தினார்.

### அரசுப் பள்ளிகளின் மாணவியரின் சாதனை

அடுத்தாக அரசுப் பள்ளியில் படித்து பல்வேறு துறைகளில் சாதித்தவர்களை மேடையேற்றினார்கள்.

பொதுவாக அரசுப் பள்ளி என்றாலே ஒருவித அலட்சியம் தான் என்று கூறுவார்கள். ஆனால், அரசுப் பள்ளி என்பது சிறுமையின் அடையாளம் அல்ல; நம் பெருமையின் அடையாளம் என்ற உணர்வு மேடையேறிய ஒவ்வோருவர் முகத்திலும் இருந்தது. அனைத்துத் துறைகளிலும் சாதித்துக் காட்டி இன்று தனித்துவத்தோடும் மிடுக்கோடும் நின்றிருந்தனர் அந்த மாணவர்கள்.

### முதலமைச்சரின் பூரிப்பு

ஆட்சிப் பொறுப்பேற்ற நான்கு ஆண்டுகளாக உழைத்த உழைப்பு இன்று விருட்சமாக நிற்பதை முதலமைச்சர் அவர்கள் மிகுந்த பூரிப்போடு பார்த்துக் கொண்டிருந்தார்.

பல்வேறு துறைகளில் சாதித்த அரசுப் பள்ளி மாணவர்களால் அந்த மேடையே நிரம்பி வழிந்தது.

ஒவ்வொரு மாணவரும் தங்களுக்கு அரசு எப்படியெல்லாம் உதவியது என்று மனம் திறந்து பேசினர்.

இதில் குறிப்பிடத்தகுந்த ஒரு முக்கிய விஷயம், சமுதாயத்தில் மிகவும் பின் தங்கிய மற்றும் பழங்குடியின சமூகங்களைக் கொண்ட, கிராமப்புற மாணவ, மாணவியர் என்பதுதான் கூடுதல் சிறப்பு..

### புகைப்படம் எடுத்துக் கொண்டனர்– பாராட்டினர்

அடுத்ததாக முதலமைச்சர் மற்றும் துணை முதலமைச்சர் அமைச்சர் பெருமக்கள் மற்றும் சிறப்பு விருந்தினர் தெலுங்கானா முதலமைச்சர் அவர்களுடன் குழுப் புகைப்படம் எடுத்துக் கொண்டனர்.

இந்த விழாவில், 2025-26ஆம் கல்வி ஆண்டிற்கான, “புதுமைப்பெண்” மற்றும் “தமிழ்ப் புதல்வன்” திட்டங்களைத் தொடங்கி வைத்து, மாணவ, மாணவியர்க்கு வங்கி பற்று அட்டைகளை (Debit Card) வழங்கினார்கள். இந்த ஆண்டு, 2.57 இலட்சம் மாணவ, மாணவியர், “புதுமைப் பெண்” மற்றும் “தமிழ்ப் புதல்வன்” திட்டத்தில் பயன்பெறவுள்ளார்கள்..

அதனைத் தொடர்ந்து, தமிழ்நாட்டில் கல்வி வளர்ச்சிக்குத் தொடர்ந்து பங்காற்றி வரும் சமூக சிந்தனையாளர்கள், சிறப்பாகப் பணியாற்றிய தலைமை ஆசிரியர்கள், ஆசிரியர்கள், பயிற்றுநர்கள், கல்வி அமைப்புகளின் நிர்வாகிகள் ஆகியோரது சேவைகளைப் பாராட்டி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மற்றும் தெலுங்கானா முதலமைச்சர் அ.ரேவந்த் ரெட்டி ஆகியோர் சால்வை அணிவித்து, நினைவுப் பரிசு மற்றும் சான்றிதழ்களை வழங்கிச் சிறப்பித்தனர்.

### திரை இயக்குநர் வெற்றிமாறன்

இந்த நிகழ்வில் வெற்றிமாறன் பேசும் போது, தமிழ்நாட்டில் எப்போதும் கல்விக்கு முக்கியத்துவம் இருந்திருக்கிறது. அப்பா - அம்மா கஷ்டப்பட்டாலும், உணவுக்கு வழியில்லை என்றாலும், பிள்ளைகளை படிக்க வைக்க நினைப்பார்கள். கடந்த 50 ஆண்டுகளாகக் கல்விக்காக நடந்த வேலை அது. இப்போது கல்வியை நம்மிடமிருந்து பறித்துக்கொள்வதற்கான வேலை நடக்கிறது. அதை எப்படி சிஸ்டமெட்டிக்காக எப்படி எதிர்கொள்ள வேண்டும் என்பது தான் 4 ஆண்டுகளாக நடந்திருக்கிறது. உயர் கல்வியில் இந்த ஆண்டு சேர்ந்த மாணவர்களின் எண்ணிக்கை நெகிழ்வாக இருந்தது. உண்மையில் கல்வியில் நாம் பெரும் பாய்ச்சலைக் கண்டிருக்கிறோம் என்று தான் தோன்றுகிறது. எல்லோரும் சொன்னது போல காலை உணவு திட்டம் மிகவும் முக்கியமானது. அதற்காகவே பலர் படிக்க வருகின்றனர். அதை செயல்படுத்திய குழுவுக்கும், முதல்வருக்கும் நன்றி” என தெரிவித்தார்.

### பேரறிஞர் அண்ணா அவர்களைப் போன்றவர் முதலமைச்சர் அவர்கள் என்றார் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள்

நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அடிக்கடிச் சொல்வது ஒன்றே ஒன்றுதான்; “கல்வி ஒன்றே அழிக்க முடியாத சொத்து” என்று நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சொல்வார்கள்.

கல்வி மாணவர்களுக்கான சொத்து என்றால், இங்கு அமர்ந்திருக்கக்கூடிய மாணவர்கள் தான் நம்முடைய தமிழ்நாட்டினுடைய சொத்து.

தமிழ்நாட்டிற்கு “தமிழ்நாடு” என்று பெயர் சூட்டியிருக்கின்றேன். தமிழ்நாட்டில் இந்திக்கு இடம் இல்லை, இரு மொழிக்கொள்கை மட்டும்தான் என்று சட்டம் இயற்றி இருக்கின்றேன். சுயமரியாதை திருமணத்திற்குச் சட்ட அங்கீகாரத்தை வழங்கி இருக்கின்றேன். இந்த மூன்று விஷயத்தை நான் தமிழ்நாட்டிற்காகச் செய்திருக்கிறேன். எனக்குப் பிறகு ஆட்சிக்கு வரக்கூடியவர்கள் இந்த மூன்றையும் மாற்ற நினைத்தால், அவர்களுடைய மனதில் ஒரு பயம் வரும்; ஒரு அச்சம் வரும். அந்த அச்சம் வரும்போதெல்லாம், இதையெல்லாம் மாற்றிவிட்டால் மக்கள் நம்மை என்ன செய்வார்கள் என்ற பயம் வரும். அந்த அச்சம் எதிரிகளை எவ்வளவு நாளைக்கு ஆட்டுகிறதோ அதுவரைக்கும் தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் இந்த அண்ணாதுரைதான் என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள்.

அதையே நான் இப்போது கொஞ்சம் மாற்றிச் சொல்ல விரும்புகின்றேன். காலை உணவுத்திட்டம், புதுமைப் பெண் திட்டம், தமிழ்ப்புதல்வன் திட்டம், நான் முதல்வன் திட்டம் போன்ற திட்டங்களை எல்லாம் நம்முடைய முதலமைச்சர் அவர்கள், நம்முடைய திராவிட மாடல் அரசு இன்றைக்கு வழங்கி இருக்கின்றது.

இந்த திட்டங்களை எல்லாம் யாராவது ஒரு நாள் என்றைக்காவது மாற்றிவிடலாம் என்று நினைத்தால் கூட அவர்களுடைய மனதிலும் நிச்சயம் பயம் வரும். அந்த பயம் இருக்கின்றவரைக்கும் இந்தத் தமிழ்நாட்டை ஆளுகிறவர் நம்முடைய முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் தான் என்று பொருள்.

இன்றைக்கு தமிழ்ப்புதல்வன், புதுமைப் பெண் திட்டங்கள் மூலம் இந்தக் கல்வி ஆண்டிற்கான ஊக்கத் தொகை பெற்றுள்ள அத்தனை மாணவச் செல்வங்களுக்கும் என்னுடைய வாழ்த்துகளை நான் தெரிவித்துக் கொள்கின்றேன்” என்று குறிப்பிட்டார்.

### உங்கள் படிப்பிற்குத் துணையாக, உங்கள் வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்கு நான் இருக்கிறேன் என்ற தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்;

அனைத்துச் சமூகத்தினருக்கும் கல்விச் சாலைகளில் இடம் கிடைக்க, இடஒதுக்கீட்டை உயர்த்தினார். இப்படி, ஏராளமான போராட்டங்கள் நிறைந்தது நம்முடைய கல்விப் பயணம்! இந்தப் பயணத்தை அடுத்த கட்டத்துக்குக் கொண்டு போகத்தான், நம்முடைய திராவிட மாடல் அரசு நான்கு ஆண்டுகளாகப் புதுமைப்பெண் திட்டம், தமிழ்ப்புதல்வன் திட்டம், நான் முதல்வன் திட்டம், மாடல் ஸ்கூல்ஸ், ஸ்மார்ட் வகுப்பறைகள், விளையாட்டுத் துறைக்கு சிறப்பு கவனம் செலுத்தும் திட்டங்கள் என்று ஏராளமான திட்டங்களைக் கொண்டு வந்து கொண்டிருக்கிறோம்!

ஒரு வேளை உணவு தருவதாலோ, மாதம் ஆயிரம் ரூபாய் தருவதாலோ, “என்ன பெரிய மாற்றம் வந்துவிடும்?” என்று சிலர் நினைக்கலாம்.

காலை உணவுத் திட்டம் அறிமுகம் செய்ததில் இருந்து, மாணவர்களுடைய வருகை அதிகரித்திருக்கிறது. புதுமைப்பெண், தமிழ்ப்புதல்வன் திட்டங்கள் செயல்பாட்டிற்கு வந்ததில் இருந்து, ப்ளஸ் 2 முடித்த மாணவர்களில் 75 விழுக்காடு மாணவர்கள் உயர் கல்வியில் சேருகிறார்கள். குறிப்பாக, பெண்கள் உயர் கல்வியில் சேருவது அதிக அளவில் முன்னேற்றம் அடைந்திருக்கிறது. அரசுப் பள்ளியில் படித்த ஆயிரத்து 878 மாணவர்கள் கடந்த 4 ஆண்டுகளில், முதன்மைக் உயர்கல்வி நிறுவனங்களுக்குப் படிக்கச் சென்றிருக்கிறார்கள்.

இன்றைக்கு கல்வியில், தமிழ்நாடு பெற்றிருக்கின்ற எழுச்சி, இந்தியாவில் இருக்கின்ற பல மாநிலங்களைத் திரும்பி பார்க்க வைத்திருக்கிறது! நம்முடைய திட்டங்களை அவர்கள் மாநிலங்களில் செயல்படுத்த ஆய்வு செய்து கொண்டிருக்கிறார்கள்.

நிச்சயம் நம்முடைய திட்டங்களாலும், உங்களுடைய வெற்றிகளாலும் அது நடைபெறும்! என்னுடைய இலக்கு... அனைவருக்கும் கல்வி! அனைவருக்கும் உயர்தரக் கல்வி! கல்வி நிலையங்களுக்குள்ளே எந்தக் காரணத்தாலும், எவர் ஒருவரும் வராமல் இருக்கக் கூடாது; தடுக்கப்படவும் கூடாது!

மாணவர்களான உங்களுக்கு நான் சொல்லிக் கொள்வது ஒன்றே ஒன்றுதான்... நம்முடைய அரசு உருவாக்கித் தரக்கூடிய வாய்ப்புகளை எல்லாம் நீங்கள் பயன்படுத்திக் கொண்டு உயர, உயரப் பறக்க வேண்டும். அதைப் பார்த்து நாங்கள் மகிழ்ச்சி அடையவேண்டும்.

அப்படிப்பட்ட மகிழ்ச்சியைத் தான் இங்கே பேசிய பலர் கொடுத்திருக்கிறீர்கள். இனியும் கொடுத்துக் கொண்டே இருக்க வேண்டும். நீங்கள் பட்டப் படிப்பை முடித்துவிட்டு வேலைக்குச் சென்றாலும், நல்ல வேலையில் உச்சநிலைப் பதவியில் சென்று இருந்தாலும், பட்டமேற் படிப்பையும் படிக்க வேண்டும். ஆராய்ச்சிப் படிப்புக்கும் செல்ல வேண்டும்.

உலகம் மிகவும் பெரியது. உங்களுடைய வெற்றி அனைத்துத் திசைகளிலும் எதிரொலிக்க வேண்டும். நீங்கள் தொடர்ந்து படியுங்கள்... உங்களுடைய படிப்புக்குத் துணையாக உங்களுக்கான வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்கு இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் இருக்கிறேன்!

கல்வியில் சிறந்த தமிழ்நாடு, கல்வியிலேயே உயர்ந்த தமிழ்நாடாக மாறவேண்டும்; மாறும்; நிச்சயமாக மாற்றுவோம்” என்று முதலமைச்சர் அவர்கள் கூறியது அரங்கில் கூடியிருந்த அனைவரையும் உருகச் செய்தது.

### சிறப்பு விருந்தினர் தெலுங்கானா முதலமைச்சர் அ.ரேவந்த் ரெட்டி அவர்கள் பேசுகையில் அடுத்த கல்வியாண்டு முதல் தெலுங்கானாவிலும் காலை உணவுத் திட்டம்

தமிழ்நாடு கல்வியிலும், விளையாட்டிலும் மிகச் சிறந்து விளங்குகிறது. காலை உணவு திட்டம் ஈடு இணையற்ற திட்டம். ஏழை எளிய மக்களின் நலனுக்காக இந்தத் திட்டத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் செயல்படுத்தி வருகிறார். இதைப் பார்த்ததும் நான் ஒரு முடிவு செய்து விட்டேன். தெலுங்கானாவில் அடுத்த கல்வியாண்டு முதலாக, காலை உணவு திட்டத்தை நாங்களும் செயல்படுத்தப் போகிறோம்.

எனது இனிய நண்பரான மு.க.ஸ்டாலின் அவர்களிடம் இருந்து இந்தத் திட்டத்தை எடுத்துக் கொள்கிறேன்.

நான் முதல்வன் திட்டம், தமிழ்ப் புதல்வன் திட்டம் போன்ற சிறப்பான திட்டங்களைக் கொண்டு வந்து செயல்படுத்தி வரும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை மனதார பாராட்டுகிறேன்.

### தமிழ் மக்களாகிய நீங்கள், இப்படியொரு சிறந்த முதலமைச்சர் கிடைத்ததற்காக பெருமைப் பட வேண்டும்;

தமிழ் மக்களாகிய நீங்கள், இப்படியொரு சிறந்த முதல்வர் கிடைத்ததற்காகப் பெருமைப்பட வேண்டும். தமிழ்நாட்டின் மாடல் ஒட்டு மொத்த இந்தியாவுக்கே உதாரணமாக உள்ளது. தமிழ்நாடும், தெலுங்கானாவும் ஒரே மாதிரியான கலாச்சாரங்களைக் கொண்டுள்ளன. சமூகநீதியும் தெலுங்கானாவிலும், தமிழகத்திலும் பொதுவானதாக உள்ளது.

### முத்தமிழறிஞர் கலைஞரைப் பாராட்டிய தெலுங்கானா முதலமைச்சர்

சமூக நீதியில் எங்களுக்கு முன்னுதாரணம் யார் தெரியுமா? முத்தமிழறிஞர் கலைஞர்தான்.

மற்றொரு அறிவிப்பையும் நான் இங்கு அறிவிக்கிறேன். தெலுங்கானாவில் நடைபெறவுள்ள உள்ளாட்சித் தேர்தலில் தமிழ்நாட்டில் இருப்பதை போலவே 69 சதவீத இடஒதுக்கீட்டை அமல்படுத்தப் போகிறேன். கல்வி மட்டுமல்ல விளையாட்டிலும் சிறந்த மாநிலமாக தமிழ்நாடு உள்ளது.

தெலுங்கு மற்றும் தமிழ் மக்கள் நூற்றாண்டு கால நட்பு கொண்டவர்கள். தமிழ்நாடு அரசு பட்டதாரிகளுக்குத் தொழில் திறன் பயிற்சி வழங்கி வேலை வாய்ப்புகளை உறுதி செய்கிறது. அதேபோல, தெலுங்கானாவிலும் இந்தத் திட்டத்தை நாங்கள் செயல்படுத்தப் போகிறோம் என்று பேசினார்.

‘கல்வியில் சிறந்த தமிழ்நாடு’ என்ற நிகழ்ச்சி, மாநிலத்தின் கல்விச் சாதனைகளை ஆவணப்படுத்துவதோடு மட்டுமல்லாமல், அரசுக்கும், மாணவர்களுக்கும், பெற்றோருக்கும், ஆசிரியர்களுக்கும் இடையேயான பிணைப்பை வலுப்படுத்தும் ஒரு தளமாகவும் அமைகிறது.

தமிழ்நாட்டில், கல்வி என்பது வகுப்பறைக் கட்டடங்களுக்குள் முடங்கிக் கிடக்கும் வெறும் பாடத்திட்டமல்ல.

அது, தலைமுறைத் தலைமுறையாகத் தொடர்ந்த சமூகப் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளைத் தகர்த்தெறியும் வலிமைமிக்க போர்வாள்.

ஒவ்வொரு குழந்தையும், எந்தப் பின்புலத்தில் இருந்து வந்திருந்தாலும், தன் முழு ஆற்றலையும், ஆளுமையையும் கட்டவிழ்த்து, வாய்ப்புகளை வென்றெடுக்கவும் வழிவகை செய்யும் மகத்தான சமூக நீதித் தத்துவத்தின் உயிர்த்துடிப்பு!

இந்த உணர்வின் வெளிப்பாடே, ‘கல்வியில் சிறந்த தமிழ்நாடு’ என்ற இந்த மிகச் சிறந்த முழக்கம்...!